செ.வெ.எண்:117 நாள்:24.02.2018

**<u>திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி , சுயநிதி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் ரூ.4.50 இலட்சம் மதிப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்கள்.</u>**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி அலுவலகத்தில் இன்று 24/02/2018 தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்வமோகன்தாஸ்பாண்டியன் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் சுயநிதிகளில் ரூ.4.50 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி., இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய தினம் முக்கிய திட்டமான பணிக்கு செல்லும் பெண்களுக்கான ஐம்பது சதவீதம் மானியத்தில் வழங்கப்படும் இருசக்கர வாகனத் திட்டம் இன்று மாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது. பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் அவர்களின் பணிச்சுமை மற்றும் அலுவலகங்களுக்கு உரிய நேரங்களுக்கு செல்வதற்கும் இருசக்கர வாகனத்திட்டம் உறுதுணையாக இருக்கும். திருநெல்வேலி மாவட்டத்தில் 4500 நபர்களுக்கு இருசக்கர வாகனம் வழங்கப்பட உள்ளது. இன்று தென்காசி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 6 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.3.50 இலட்சத்தில் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.1.00 இலட்சம் மதிப்பில் 3 பயனாளிகளுக்கு தையல்மிஷின் , 12 பயனாளிகளுக்கு தேய்ப்புப் பெட்டி,

1 பயனாளிக்கு மூக்கு கண்ணாடி மற்றும் 20 பயனாளிகளுக்கு சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்று சக்கர வாகனத்திட்டத்தில் தகுதியான மாற்றுத்திறனாளி நபர்கள் இருப்பின் அவர்கள் அனைவருக்கும் ஸ்கூட்டர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்தில் தென்காசி நகராட்சி ஆணையாளர் திரு. பி. ஏகராஜ், மாவட்ட மாற்றுத் திறன் அலுவலர் திருமதி. சாந்தி குளோரி எமிரால்ட் , தென்காசி வட்டாட்சியர் திரு. ஆர். முருகன் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. சண்முகசுந்தரம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கணேஷ் தாமோதரன், செல்லத்துரை பாண்டியன், கார்த்தி ,சுடலை, முருகன்ராஜ், வெள்ளப்பாண்டி, ரெங்கராஜ், கசமுத்து, சுப்புராஜ், கிருஷ்ணமூர்த்தி, சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.